www.Padasalai.Net www.CBSEtips.in


**MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)**

**+2 Com Model Qly 2022**

Date : 05-Sep-22

12th Standard

வணிகவியல்

Reg.No. : | | | | | |

**Prepared by M.MuthuSelvam Cell No : 9842104826**

Exam Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு** 12 x 1 = 12

1) வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ______ என்பர்.
(a) ஒழுங்கு (b) பயன்பாடு (c) வேலைப்பகிர்வு (d) சமத்துவம்

2) ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்?
(a) ஒரே ஒரு முறை (b) இரண்டு முறை (c) மூன்று முறை (d) பல முறை

3) உடனடியாக பணமாக மாற்றக்கூடிய நிதிச் சொத்துக்களின் சந்தை ________
(a) பணச்சந்தை (b) மூலதனச் சந்தை (c) இரண்டாம் நிலைச் சந்தை (d) எதிர்கால சந்தை

4) நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர்
(a) காளை (b) கரடி (c) மான் (d) வாத்து

5) புறத்தோற்றமற்ற வடிவில் பத்திர விற்பனையைத் தொடங்கிய முதல் நிறுவனம் _____ ஆகும்.
(a) டாடா தொழில் நிறுவனம் (b) ரிலையன்ஸ் தொழில் நிறுவனம் (c) இன்போசிஸ்
(d) பிர்லா தொழில் நிறுவனம்

6) மனித வள மேலாண்மை __________ உறவினை நிர்ணயிக்கிறது.
(a) அக, புற (b) முதலாளி, தொழிலாளி (c) உரிமையாளர், வேலைக்காரன் (d) முதல்வர், முகவர்

7) பணி மாற்றம் என்பது ஒரு ______ ஆட்சேர்ப்பு வளமாகும்.
(a) அக வள (b) புற வள (c) புறத்திறனீட்டல் (d) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை.

8) குறிப்பிட்ட தலைப்பில் விரிவான கலந்துரையாடல்
(a) ஆய்வின் கீழ்ப்பயிற்சி (b) பயிற்சியளிப்பு (c) மாநாடுகள் (d) ஆலோசனை

9) சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது
(a) வாடிக்கையாளரின் தகுதி (b) பொருளின் தரம் (c) வாடிக்கையாளரின் பின்புலம்
(d) வாடிக்கையாளரின் தேவைகள்

10) கீழ்காணும் குழுவில் எந்த குழு பசுமை வணிக கருத்தை அறிமுகம் செய்தது
(a) ACME (b) டாட்டா (c) ரிலையன்ஸ் (d) ici

11) பொருட்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
(a) 1962 (b) 1972 (c) 1982 (d) 1985

12) ஜான் எப் கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில் நுகர்வோர் உரிமையில் இடம் பெறாதவை எது?
(a) பாதுகாப்பு உரிமை (b) தேர்ந்தெடுக்கும் உரிமை (c) நுகரும் உரிமை (d) தெரிவிக்கும் உரிமை

**பகுதி - அ பொருத்துக** 1 x 1 = 1

13)

| | |
|---|---|
| a) உளவியல் தேர்வு | (1) மனோபாவச் சோதனை |
| b) எண் திறன் தேர்வு | (2) உளவியல் சோதனை |
| c) தேர்வு சோதனை | (3) கல்வித் தகுதி |
| d) நுண்ணறிவுத் தேர்வு | (4) கணித திறன் சோதனை |

**பகுதி - அ கூற்று மற்றும் காரணம்** 1 x 1 = 1

14) **உறுதிப்படுத்துதல் (A):** திரு. உசேன் போல்ட் உலகளவில் ஓட்டப்பந்தய வீரராக திகழ்கிறார்.
**காரணம் (R):** "பயிற்சி" வெற்றியின் இரகசியம்.
அ. (A) மற்றும் (R) தவறானது.
ஆ. (A) மற்றும் (R) சரியானது (A) ஐ (R) விளக்குகிறது.
இ. (A) மற்றும் (R) தவறானது (A) ஐ (R) விளக்குகிறது.
ஈ. (A) மற்றும் (R) சரியானது (A) ஐ (R) விளக்கவில்லை.

**பகுதி - அ சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

15) அ) மனித வளத்தின் மூலமாக மட்டுமே மற்ற அனைத்து வளங்களும் பயன்படுத்தப்படுகிறது.
ஆ) மனித வளங்கள் மூலமாக மட்டுமே மனித உறவுகள் சாத்தியமாகவில்லை.
இ) மனித வளங்கள் சட்டபூர்வ கட்டமைப்பினில் நன்கு பாதுகாக்கப்படுவதில்லை.
ஈ) மனித வளமானது பிற அனைத்து உற்பத்திக் காரணிகளையும் நிர்வகிப்பதில்லை.

**பகுதி - அ பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு** 1 x 1 = 1

16) உள் வெளியீடு
உரிம வெளியீடு
தனியார் வெளியீடு
பொது வெளியீடு

**பகுதி - அ சரியான இணையை காண்க** 1 x 1 = 1

17) அ) கருவூல இரசீது - கடன் உறுதிப் பத்திரம்
ஆ) வணிக இரசீது - குறைந்தளவு நீர்மைத் தன்மை
இ) வைப்பு சான்றிதழ் - நீண்ட கால வைப்பு ஆவணம்
ஈ) தூய்மை இரசீது - குடிநீர் இரசீது

**பகுதி - அ தவறான இணையை காண்க** 1 x 1 = 1

18) அ) கடின பண்டக சந்தை - தங்கம்
ஆ) பண்டக சந்தை - பத்திரங்கள்
இ) மென் பண்டக சந்தை - பருத்தி
ஈ) வருவிக்கப்பட்ட சந்தை - நிதி கருவிகள்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**பகுதி - அ சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

19) அ) துணிகர மூலதன நிதி புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு வழிவகை செய்கிறது
ஆ) துணிகர மூலதன நிதி மூலமே நிறுவனங்கள் உச்ச நிலையை அடைய முடிவதில்லை.
இ) துணிகர மூலதன நிதி என்பது அரசு நிதியின் ஒரு பகுதியாகும்
ஈ) துணிகர மூலதனம் அரசின் திட்டங்களை வணிகமயமாக்குவதற்கு தேவையான நிதியை அளிக்கிறது.

**பகுதி - அ தவறான இணையை காண்க** 1 x 1 = 1

20) அ) தேர்வு நடவடிக்கையில் இறுதி நிலை நேர்காணல் ஆகும்.
ஆ) நேர்காணலில் பொருள் " மற்றவரை காணல்" என்பதாகும்.
இ) நேர்காணல் "வயர்" என்ற பிரெஞ்ச் வார்த்தையிலிருந்து வந்தது.
ஈ) இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபருக்கு இடையே நடைபெறுவதாகும்

**பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா** 7 x 2 = 14

21) மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22) OTCEI - சிறு குறிப்பு வரைக.
23) ஊக வணிகர்களின் வகைகள் யாவை?
24) "சந்தை மேற்கோள்" என்றால் என்ன?
25) பதவி உயர்வு என்றால் என்ன?
26) பங்கேற்று நடித்தல் என்றால் என்ன?
27) சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.
28) "வாங்குவோர் ஜாக்கிரதை" என்றால் என்ன?
29) ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
30) பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன?

**பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா** 7 x 3 = 21

31) மேலாண்மை வரைவிலக்கணம் தருக.
32) பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி.
33) மனித வள மேலாண்மையின் வரைவிலக்கணம் தருக.
34) ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன ?
35) மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?
36) பயிற்சி அளிப்பவர் மற்றும் பயிற்சி பெறுபவர் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
37) சந்தையிடுகையாளர் ஓர் புதுமை கண்டுபிடிப்பாளரா? நீர் அதை ஏற்றுக்கொள்வீரா?
38) தனியிடச்சந்தை பற்றி விளக்குக
39) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
40) அம்புஷ் / மறைமுக சந்தையிடுதல் என்றால் என்ன?

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி.

**(OR)**

b) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக.

42) a) முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.

**(OR)**

b) ஆட்சேர்ப்பு முறைக்கும், தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி?

43) a) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக.

**(OR)**

b) பணிவழி பயிற்சிக்கும், பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

44) a) அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி.

**(OR)**

b) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.

45) a) பங்குச் சந்தை - பொருட்கள் பரிமாற்றகம் வேறுபாடு காண்.

**(OR)**

b) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின்சந்தையிலிருந்து வேறுபடுகிறது - விளக்கு.

46) a) செபியின் பணிகளை விவரி.

**(OR)**

b) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?

47) a) மனித வள மேலாண்மையின் செயல் பணிகளை விவரி

**(OR)**

b) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?

# பல முறை முயற்சித்தும் உனக்கு தோல்வி என்றால் உன் இலக்கு தவறு சரியான இலக்கை தேர்ந்தெடு..

*******************************************


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)

**+2 Com Model Qly 2022**

Date : 04-Sep-22

12th Standard

Reg.No. :

## வணிகவியல்

**Prepared by M.MuthuSelvam Cell No : 9842104826**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு** 12 x 1 = 12

1) (c) வேலைப்பகிர்வு
2) (d) பல முறை
3) (a) பணச்சந்தை
4) (a) காளை
5) (b) ரிலையன்ஸ் தொழில் நிறுவனம்
6) (b) முதலாளி, தொழிலாளி
7) (a) அக வள
8) (c) மாநாடுகள்
9) (d) வாடிக்கையாளரின் தேவைகள்
10) (a) ACME
11) (c) 1982
12) (c) நுகரும் உரிமை

**பகுதி - அ பொருத்துக** 1 x 1 = 1

13) a)
மனோபாவச் சோதனை
b)
கணித திறன் சோதனை
c)
கல்வித் தகுதி
d)
உளவியல் சோதனை

**பகுதி - அ கூற்று மற்றும் காரணம்** 1 x 1 = 1

14) ஆ. (A) மற்றும் (R) சரியானது (A) ஐ (R) விளக்குகிறது.

**பகுதி - அ சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

15) மனித வளத்தின் மூலமாக மட்டுமே மற்ற அனைத்து வளங்களும் பயன்படுத்தப்படுகிறது.

**பகுதி - அ பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு** 1 x 1 = 1

16) உள் வெளியீடு

**பகுதி - அ சரியான இணையை காண்க** 1 x 1 = 1

17) அ) கருவூல இரசீது - கடன் உறுதிப் பத்திரம்

**பகுதி - அ தவறான இணையை காண்க** 1 x 1 = 1

18) ஆ) பண்டக சந்தை - பத்திரங்கள்

**பகுதி - அ சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

19) அ) துணிகர மூலதன நிதி புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு வழிவகை செய்கிறது

**பகுதி - அ தவறான இணையை காண்க** 1 x 1 = 1

20) தேர்வு நடவடிக்கையில் இறுதி நிலை நேர்காணல் ஆகும்.

**பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா** 7 x 2 = 14

21) 1) கணக்கியல்
2) வணிகச்சட்டங்கள்
3) உளவியல்
4) புள்ளியியல்
5) பொருளியல்
6) தரவு செயலாக்கம்

22) பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே "இந்திய உடனடி பங்கு மாற்றகம்" (OTCEI) என்பதாகும்.

23) 1. காளை (தெஜிவாலா)
2. கரடி (மண்டிவாலா)
3. கலைமான் (முனைம வேட்டையாளர்)
4. முடவாத்து (போராடும் மனப்பாங்கு போராளி)

24) (i) பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலைகள் பதிவு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன
(ii) இந்த விலைகள் " சந்தை மேற்கோள்" என்று அழைக்கப்படுகின்றன

25) பணி மூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில், பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலைக்கு சென்று பணிபுரிய அளிக்கப்படும் வாய்ப்பிற்கு பதவி உயர்வு எனப்படுகிறது.

26) 1. பயிற்றுவிப்பாளர்கள், பதவியின் சூழ்நிலையை அல்லது பதவியில் நியமிக்கப்பட்ட பாத்திரத்தை விளக்குவார்.
2. அவர்கள் எந்த ஒத்திகையும் இல்லாமல் ஒதுக்கப்படும் பாத்திரங்கள் செயல்பட வேண்டும்.
3. முன் தயாரிக்கப்பட்ட உரையாடல்கள் எதுவும் இல்லை.

27) திரு. ஜெரோமி எம்சி கார்தோ அவர்களின் கூற்றுப்படி, "சந்தையிடுகை கலவை நான்கு கூறுகளை கொண்டுள்ளது. அவை பொருள் கூறுகள், விலை கூறுகள், விற்பனை மேம்பாடுக் கூறுகள் மற்றும் இட கூறுகள் ஆகும்.

28) நுகர்வோரின் தேவை மற்றும் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் பொருட்கள் மற்றும் சேவைகளை உருவாக்கி, மேம்படுத்தி, தரமான செயல்திறன் மிக்க பொருள்களை மலிவு விலையில் பொருள்களை சுற்றுசூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதை பசுமை சந்தைப்படுத்துதல் எனலாம்.

29)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(i) பொருட்களை வாங்கியவர் அப்பொருள் அவரது எதிர்பார்ப்புகளை ஈடுசெய்யவில்லை எனில் (அல்லது) குறைபாடு உடையதாக இருப்பின் அதற்கு விற்றவர் பொறுப்பேற்க மாட்டார்.
(ii) வாங்குபவரே பொறுப்பு என்று எச்சரக்கை செய்யும் தத்துவம் " வாங்குபவோர் ஜாக்கிரதை (அல்லது) வாங்குவோர் விழித்திரு " எனும் கோட்பாடு ஆகும்.

30) 1. பாதுகாப்பில் உரிமை
2. தகவல் பெறும் உரிமை
3. தேர்ந்தெடுக்கும் உரிமை
4. கேட்கும் உரிமை

**பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா** 7 x 3 = 21

31) (i) "மேலாண்மை என்பது முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது" - ஹென்றி ஃபோயல்
(ii) மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கிறது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது". - பீட்டர் F. டிரக்கர்

32) 1. பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது.
2. பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லாதது.
3. ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி
4. ஒரு இடத்தில ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது.
5. பங்கு மாற்றகங்களில் பங்குகளை பட்டியலிட சரியான ஒழுங்குமுறைகள் இல்லை.
6. பங்கு பரிவர்த்தனையின் விளிம்பு தேவைகள் விஷயத்தில் வலியுறுத்துவதில்லை.

33) (i) மனித வள மேலாண்மை என்பது "நிறுவனத்தின் முக்கிய இலக்குகள் அல்லது நோக்கங்களை அடைவதற்காக அதிகாரியால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு பணிகளான பணியாளர் திரட்டுதல் வளர்ச்சி, இழப்பீடு, ஒருங்கிணைப்பு மற்றும் பணியாளர் நிர்வகிப்பு ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்."-பிலிப்போ (அல்லது)
(ii) மனித வள மேலாண்மை என்பது " வேலைவாய்ப்பில் மனித வளத்தின் பயன்பாடு மற்றும் அதன் வளர்ச்சி, திட்டமிடுதலில் திறன் மிக்க படிநிலைகள் மற்றும் பயன்பாட்டினை இயக்குதல் ஆகும்." - டேல் லோடர்.

34) 1. வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலை வேண்டி விண்ணப்பம் செய்யப்படுகிறது.
2. வேலை தேடுவோர் தன்னுடைய தகுதி எதிர்பார்க்கும் சம்பளம் போன்ற விவரங்களை தருகின்றரார்.
3. விண்ணப்பிக்கும் நிறுவனத்தில் பணியிடம் காலியாக உள்ளது என்பதை உறுதியாக சொல்ல முடியாது.

35) 1. விண்ணப்பத்தாரிடம் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையிலான கேள்விகள் கேட்கப்பட்டு நேர்காணல் நடத்தப்படுவதே மன அழுத்த நேர்காணல் எனப்படுகின்றது.
2. பெரும்பாலும் இவ்வகை நேர்காணல் விற்பனைப் பிரதிநிதிகள், பாதுகாப்பு மற்றும் சட்ட அமலாக்கம் துறைகளில் நடத்தப்படுகின்றது.

36) **பயிற்சி அளிப்பவர்:**
1. பணியாளருக்குத் திறன்களை போதித்து, பணியை சிறப்பாக செய்ய தயார் செய்யும் ஒரு நபர் பயிற்சி அளிப்பவர் ஆவார்.
2. பயிற்சி அளிப்பவர் என்பவர் பயிற்சியாளர், ஆசிரியர் வழிகாட்டல், ஆலோசகர், ஆலோசகர் கையேடு, குரு, மேலாளர், கையாளுநர், ஆசிரியர் மற்றும் கல்வியாளர் போன்றோர் ஆவர்.
**பயிற்சி பெறுபவர்:**
1. ஒரு வேலையின் திறனை கற்றுக்கொள்ளும் நபரே பயிற்சி பெறுபவர் ஆவார்.
2. பயிற்சி பெறுபவர் மனிதவள மேண்மைத்துறை அல்லது மேற்பார்வையாளாரின் பரிந்துரையின் அடிப்படையிலும், தன்சுய ஆர்வத்தின் அடிப்படையிலும் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுகிறார்.

37) 1. ஆம், புதுமை கண்டுபிடிப்பாளர்தான் என நான் ஏற்றுக்கொள்வேன்.
2. ஏனெனில் சந்தையிடுகையாளர், தனது பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையில் தனக்கென ஒரு இடத்தை ஏற்படுத்துவதற்கு, நடைமுறையில் இருந்து வரும் பொருட்களின் இயல்பை அதிகரித்தல், மதிப்பைக் கூட்டுதல், விலையில் மாற்றத்தை ஏற்படுத்துதல், பொருள் கொண்டு சேர்க்கும் முறை, தொழில் முறையில் மாற்றம் மற்றும் உற்பத்தி முறையில் மாற்றம் போன்றவற்றை செய்து வருகிறார்.

38) 1. தனியிடச் சந்தை என்பது உண்மையில் ஒரு சந்தையே அல்ல.
2. இது போட்டியாளர்களால் அடையாளம் காணப்படாத ஒரு வரையறுக்கப்பட்ட வகுப்பு / பிரிவு மக்களை அடையாளம் கண்டு அந்த வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அணைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது.
3. இது ஒரு பெரிய குளத்தில் ஒரு சிறிய மீனாக இருப்பதற்கு பதிலாக ஒரு சிறிய குளத்தில் ஒரு பெரிய மீனாக இருப்பது போல, ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளரின் தேவைகளை பூர்த்தி செய்யும் சந்தையாக செயல்படுகிறது.
4. உதாரணமாக, அனைத்து தொலைக்காட்சி சேனல்களிலும் சிறப்பாக ஸ்டார் ஸ்போர்ட்ஸ், ஈ எஸ் பின், ஸ்டார் கிரிக்கெட் போன்ற விளையாட்டு சேனல்கள், வெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு மட்டும் உருவானவை.
5. இது விளையாட்டில் ஆர்வம் நிறைந்த வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்கின்றது.

39) 1. சதையிடுதல் முறையில் புதிய நுட்பமாக, அம்புஷ் (பதுங்கியிருந்து) சந்தையிடுதலைக் கூறலாம்.
2. இம்முறையில் ஒரு நிகழ்ச்சிக்கு எவ்வித நிதியுதவியும் செய்யாமல் வாடிக்கையாளரின் மனதில் பதியும் வகையில் விளம்பரதாரர்களுடன் இணைந்து தங்களுடைய பொருளுக்கும் இரகசிய வழியில் விளம்பரப்படுத்திக் கொள்ளும் நுட்பத்தை அம்புஷ் (பதுங்கியிருந்து) சந்தையிடுதல் என்கிறோம்.

40) (i) வணிகர்கள் தங்களிடம் அதிகளவு பொருட்கள் இருப்பு இருப்பினும் இல்லை எனக் கூறி செயற்கையான தேவையை உருவாக்குவது செயற்கை பற்றாக்குறை எனப்படும்.
(ii) இதன் மூலம் நுகர்வோர்கள் தங்களின் தவிர்க்க இயலாத காரணத்தால் அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்குவதால் விற்பனையாளர்கள் அதிக இலாபம் அடைகின்றனர்.

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a)

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**1. வேலைப் பகிர்வு:**
(i) இக்கோட்பாட்டின் படி தொழிலமைப்பின் மொத்த பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்ய வேண்டும்.
(ii) இதன் மூலம் உற்பத்தி அதிகரிப்பதுடன் தொழிலாளர்களின் உழைப்புச் செயல்திறன் அதிகரித்து நிபுணத்துவத்திற்கு வழி வகுக்கிறது.
**2. அதிகாரமும், பொறுப்பும்:**
(i) அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்ப்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.
(ii) பொறுப்பு என்பது அவ்வாணையினை நிறைவேற்றும் கடமையினைக் குறிக்கின்றது.
**3. ஒழுங்குமுறை:**
கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் இவ்வொழுங்கு முறைகள் நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.
**4. கட்டளையொருமை:**
ஒவ்வொரு கீழ்ப்பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரியிடமிருந்து மட்டுமே கட்டளைகளைப் பெற வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உயர் அதிகாரியிடம் உயர் ஆணைகளைப் பெற்றுச் செயல்பட வேண்டியிருந்தால் அது குழப்பத்தையும், முரண்பாடுகளையும் உருவாக்கிவிடும்.
**5. ஒரு முனை இயக்கம்:**
அனைத்துத் தொடர்புடைய நடவடிக்கைகளையும் ஒரே குழுவில் வைக்க வேண்டும். பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஒரே செயல்திட்டம் இல்லாமல் இருக்குமாயின் அந்நோக்கம் நிறைவேறாமல் போகலாம்.
**6. பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்:**
நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்து விட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன் நிறுத்த வேண்டும்.
**7. ஊதியம்:**
(i) ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும். ஊதியமே தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முதன்மை கருவியாக உள்ளது.
(ii) இது நியாயமானதாகவும், சரியானதாகவும் அவர்களின் முயற்சிக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.
**8. மையப்படுத்தலின் தரம்:**
(i) தொழில் நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மைய நிர்வாகத்தின் அதிகாரம் செலுத்தும் நிலை இருக்க வேண்டும்.
(ii) முடிவெடுக்கும் அதிகாரம் நிர்வாகத்தின் உயர் மட்டத்தில் குவித்து கிடைப்பதையே மையப்படுத்தல் வெளிப்படுகின்றது.
**9. ஆணையுரிமை வரிசை:**
ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வருவதைக் குறிக்கும்.
**10. முறைமை:**
முறைமை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். நிறும விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
**11. நேர்மை நெறி:**
பணியாளர்கள் அன்புடன் நடத்தப்பட வேண்டும் மற்றும் பணியிடத்தில் நீதி முறை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
**12. பணியாளர்களின் கால வரையறையின் நிலைத்தன்மை:**
பணியாளர்கள் அடிக்கடி நியமனம் பெறுவதும், வேலையே துறந்து விட்டுச் செல்வதும் நிகழக்கூடாது.
**13. தன் முயற்சித்திறன்:**
பணியாளர்களின் தன் முயற்சித்திறனை ஊக்குவிப்பதன் மூலம் தொழில் நிறுவனத்தை பலப்படுத்தவும், புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தவும் முடியும்.
**14. குழு பிணைப்புணர்ச்சி:**
இக்கோட்பாட்டின்படி, மேலாளர்கள் பணியிடத்தில் தனித்தனியாகவும் சமூகமாகவும் பணியாளர்க்கிடையில் ஒற்றுமை வளர்ப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**(OR)**

b)

42) a)

| வ.எண் | அடிப்படை | முதல் நிலைச் சந்தை | இரண்டாம் நிலைச் சந்தை |
|---|---|---|---|
| 1 | பொருள் | இது புதிய பங்குகளுக்கான சந்தை | இது ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை |
| 2 | கொள்முதலின் வகைகள் | நேரடி | மறைமுகம் |
| 3 | பத்திர விற்பனை | ஒரே ஒரு முறை நடைபெறும் | பலமுறை நடைபெறும். |
| 4 | வாங்குதல் மற்றும் விற்பனை | நிறுமங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இடையில் | முதலீட்டாளர்களுக்கு இடையில் |
| 5 | பங்குகளை விற்பதன் மீதான ஆதாயம் பெறும் நபர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| 6 | இடைநிலையர் | ஒப்புறுதியாளர்கள் | தரகர்கள் |
| 7 | விலை | நிலையான விலை | தேவை மற்றும் அளிப்பை பொறுத்து மாறும். |
| 8 | அமைப்பு வேறுபாடு | குறிப்பிட்ட புவியியல் வேறுபாடு இல்லை | இதற்குப் புற அமைப்பு உள்ளது. |
| 9 | நிதி | புதிய நிறுவனங்கள் மற்றும் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுமங்களின் விரிவாக்கம் மற்றும் பல்வகைப்படுத்துதல் போன்றவற்றிற்கு நிதி | நிறுமங்களுக்கு நிதி வழங்கவில்லை. |

**(OR)**

b)

| அடிப்படை | ஆட்சேர்ப்பு | தேர்ந்தெடுத்தல் |
|---|---|---|
| அணுகுமுறை | நேர்மறையான அணுகுமுறை | எதிர்மறையான அணுகுமுறை |
| வரிசை | முதல் படி | இரண்டாம் படி |
| முறை | சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| செயல்முறை | மிகவும் எளிதான செயல்முறை | மிகவும் சிரமம் மற்றும் சிக்கலான செயல்முறை |
| காலம் | குறைவான காலம் போதுமானது | அதிக காலம் தேவைப்படும் |

43) a)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**1. சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்:**
(i) மூலதனச் சந்தையில் பல்வேறு வகையான பத்திரங்கள் பல்வேறு துறையைச் சார்ந்து மக்களிடமிருந்து சேமிப்பைத் திரட்டுவதற்கு உதவி செய்கின்றது.
(ii) இது நாட்டின் மூலதன உருவாக்கத்தை முடுக்குகிறது.
**2. நிலை மூலதனம்:**
(i) மூலதனச் சந்தை நிறுமங்கள் நிலை மூலதனத்தை திரட்டுவதற்கு உதவி புரிகிறது.
(ii) பங்கு மாற்றகம் முதலீட்டாளர்கள் தங்களுடைய பத்திரங்களை வாங்க அல்லது விற்க வாய்ப்பு அளிப்பதன் மூலமாகவும், அதே சமயம் நிறுமங்களின் நிலையான மூலதனம் பாதிக்காத வகையிலும் இருக்க உதவி செய்கிறது.
**3. தொழில்துறை வளர்ச்சி:**
(i) பொருளாதாரத்தின் தொழில்துறைக்கு மூலவளங்களை மாற்றுவதன் மூலம் பங்கு மாற்றகம் ஒரு மைய சந்தையாக உள்ளது.
(ii) இது நிறும பத்திரங்களில் முதலீட்டிற்கான நிதிகளை திரட்டுவதன் மூலம் தொழில்துறை வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது.
**4. உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:**
(i) பங்கு மாற்றகம் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் பத்திரங்களை வாங்க மற்றும் விற்பதற்கு ஒரு வசதியான மையத்தை வழங்குகிறது.
(ii) நீர்மைத் தன்மையை உருவாக்குகிறது.
**5. செயல் திறனுக்கு நம்பகமான வழிகாட்டி:**
(i) மூலதனச் சந்தை நிறுமங்களின் செயல்திறன் மற்றும் நிதி நிலைக்கு ஒரு நம்பகமான வழிகாட்டியாக சேவை புரிகிறது.
**6. நிதிகளின் உரிய திசையில் ஆற்றுப்படுத்தல்:**
(i) பத்திரங்களின் நடப்பு சந்தை விலை மற்றும் அதன் வருவாய், பொதுமக்கள் தங்கள் நிதியை ஒரு குறிப்பிட்ட நிறுமத்தில் முதலீடு செய்ய வழிகாட்டும் காரணியாக உள்ளது.
(ii) பொது நலனுக்காக நிதியை திறன்பட பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.
**7. பல்வேறு சேவைகளை வழங்குதல்:**
மூலதனச் சந்தையில் செயல்படும் நிதி நிறுவனங்கள் தொழில் முனைவோருக்கு நீண்ட கால மற்றும் நடுத்தர கால கடன்களை வழங்குதல், ஒப்புறுதி வழங்குதல், நிறுமங்களை தோற்றுவித்தல், உதவி செய்தல், நேர்மை பங்கு முதலில் பங்கேற்றால், நிபுணர்களின் அறிவுரைகள் வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குகிறது.
**8. பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தல்:**
(i) மூலதனச் சந்தை பின்தங்கிய பகுதிகளின் திட்டங்களின் நிதி உதவி வழங்குகிறது.
(ii) பின்தங்கிய பகுதியின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவி செய்கிறது.
**9. அயல்நாட்டு மூலதனம்:**
(i) மூலதனச் சந்தை அயல்நாட்டு மூலதனத்தை திரட்ட உதவி புரிகிறது.
(ii) இந்திய நிறுமங்களின் பத்திரங்கள் மற்றும் இதர பத்திரங்கள் மூலம் அயல் நாடுகளின் மூலதன நிதியை திரட்ட வழிவகை செய்கிறது.
(iii) அரசு, தாராளமயமாக்கல் மூலம் அந்நிய முதலீடுகள் திரட்டுகிறது.
**10. எளிய நீர்மைத் தன்மை:**
இரண்டாம் நிலைச் சந்தையின் துணை கொண்டு முதலீட்டாளர்கள் தங்களின் பத்திரங்களை விற்று நீர்மை ரொக்கமாக மாற்ற வழிவகை செய்கிறது.

**(OR)**

b)

| வ.எண் | அடிப்படை | பணிவழி பயிற்சி | பணிவழியற்ற பயிற்சி |
|---|---|---|---|
| 1. | விளக்கம் | பணியாளர் உண்மையான வேலை சூழலில் வேலையை புரிந்து கொள்கிறார். | பணியாளர், பணிச் சூழலுக்கு வெளியே பயிற்சியை பெறுகிறார். |
| 2. | செலவு | செலவு குறைவான முறை | செலவு அதிகமான முறை |
| 3. | இடம் | வேலை இடத்திலேயே பயிற்சி அளிக்கப்படுகிறது. | வேலையிடத்திற்கு வெளியே பயிற்சி அளிக்கப்படுகிறது. |
| 4. | பொருத்தம் | உற்பத்தி செய்யும் அமைப்புகளுக்கு பொருத்தமான முறை | மேலாண்மை செய்யும் நிறுவனங்களுக்கு பொருத்தமான முறை |
| 5. | அணுகு முறை | நடைமுறை அணுகுமுறை | கோட்பாடு அணுகுமுறை |
| 6. | கோட்பாடு | நிறைவேற்றல் மூலம் கற்றல் | அறிவைப் பெறுவதன் மூலம் கற்றல் |
| 7. | கற்றல் | அறிவைப் பெறுவதன் மூலம் கற்றல் | அனுபவத்தின் மூலம் கற்றல் |
| 8. | தொடர்பு | பயிற்சி மிகவும் பொருத்தமானது மற்றும் நடைமுறையில் ஒவ்வொரு நாளுக்கும் தேவையான தேவைகளைக் கையாளுதல். | ஒரே சமயத்தில் பணியாளர்களின் குழுக்களுடன் மிக எளிதாக தொடர்பை ஏற்படுத்த முடியும். |
| 9. | பணி பாதிப்பு | எந்திரங்களின் சத்தம் மூலம் பணிவழி பயிற்சியில் பணி திசை திரும்பக்கூடிய வாய்ப்பு அதிகம். | பணியிடங்களுக்கு வெளியே பயிற்சி அளிக்கப்படுவதால், பயிற்சி திசை திரும்பலுக்கு வாய்ப்பு இல்லை. |
| 10. | முறைகள் | பயிற்சி அமைப்பு, பணிச்சுழற்சி, பணி அறிவுறுத்தல், தொழிற் பயிற்சி, வழிகாட்டுதல் பயிற்சி போன்றவை. | விரிவு முறை, குழு கலந்துரையாடல் முறை, சூழ்நிலை ஆய்வு முறை, கருத்தரங்கு முறை போன்றவை. |

44) a)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


**1. முகமைகள்:**
மத்திய அரசு, மாநில அரசுகள் அரசாங்க அமைப்புக்கு இணையான அமைப்புகள், உள்ளூர் அரசு அமைப்புகள், உதாரணமாக நகராட்சிகள், மாநகராட்சிகள், துறைமுகங்கள் போன்ற தன்னாட்சி அமைப்புகள் மற்றும் பிற அமைப்புகள் போன்ற முகவர்களின் மூலம் அரசுப் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.
**2. இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு பணி:**
(i) இந்திய ரிசர்வ் வங்கி அரசுப் பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது.
(ii) பண மேலாண்மையில் சிறப்பாக செயல்படுகிறது.
**3. பத்திரங்களின் இயல்பு:**
(i) அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால் அதிக முதலீடு செய்வது பாதுகாப்பானது.
(ii) அரசே முதன்மை தொகையை திரும்பச் செலுத்துவதால் முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.
**4. பணப்புழக்க வியாபாரம்:**
(i) தங்கமுனை பத்திரங்கள் பல வகை நீர்மை தன்மை கொண்டவை.
(ii) மத்திய அரசால் வழங்கப்பட்ட பத்திரங்கள் அதிக நீர்மைத் தன்மை கொண்டதால் அதன் பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.
**5. வரி விலக்கு:**
முதலீட்டாளர்களுக்கு பரந்த அளவில் வரி விலக்கு அளிப்பது இந்த அரசு பத்திரங்களின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.
**6. சந்தை:**
(i) அரசுப் பத்திரங்களில் ஒவ்வொரு விற்பனை மற்றும் கொள்முதலுக்கு தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.
(ii) இந்தியாவில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தை ஆகிய இரண்டு சந்தைகளிலும் அரசுப் பத்திரங்கள் சந்தைப்படுத்தப்படுகிறது.
**7. படிவங்கள்:**
பங்கு சான்றிதழ்கள், உறுதிமொழி சீட்டுகள் மற்றும் கொணர்பவர் பத்திரங்கள் போன்ற வடிவங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் பத்திரங்கள் இருக்கும்.
**8. பங்கேற்பாளர்கள்:**
அரசு பத்திர சந்தையில் அரசுத்துறை வைத்துள்ள வளங்களைப் பரிமாற்றம் செய்வதில் ஒருங்கிணைந்த பங்கேற்பாளராக மத்திய மற்றும் மாநில அரசுகள் உள்ளன.
**9. வர்த்தகம்:**
அரசாங்க பத்திரங்களுக்கு இரண்டாம் நிலை சந்தை, குறுகிய, சிறிய மற்றும் குறைவான செயல்திறன் கொண்டது என்றாலும், பங்குச் சந்தைகளில் அரசாங்க பத்திரங்களை விற்பனை செய்வதிலும், வாங்குவதிலும் வங்கிகள் மற்றும் பெரு நிறுவனங்கள் ஈடுபடுகின்றன.
**10. வெளியீட்டு இயந்திரம்:**
இந்திய ரிசர்வ் வங்கியின் கீழுள்ள பொது கடன் அலுவலகம் அரசு பத்திரங்களை வெளியிடுகிறது.
**11. அரசு பத்திர வெளியீடு தொடக்கம்:**
அரசு பத்திர வெளியீடு தொடங்கிடும் சில நாட்களுக்கு முன்பே பத்திரங்களின் தன்மைகள் பற்றி அறிவிப்பு வெளியிடப்படுகிறது.
**12. சீர்மைப்படுத்துதல்:**
இந்திய ரிசர்வ் வங்கியால் பங்கு பரிவர்த்தனைகளின் மூலம் முதிர்ச்சி அடைந்த பத்திரங்களை கையகப்படுத்துதல் மற்றும் மீட்பை எளிதாக்கும் வகையில் செய்யும் நடவடிக்கை "சீர்மைப்படுத்துதல்" என அழைக்கப்படுகிறது.
**13. ஏலமிடுதல்:**
வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே "ஏலம் விடுதல்" என அழைக்கப்படுகிறது.
**14. மாறுதல்:**
ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்ய கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இரண்டாம் நிலை சந்தையில் இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்ட அதன் திறந்த சந்தை செயல்பாடு "மாறுதல்" என்று அழைக்கப்படுகிறது.

**(OR)**

b)

**1. பொருள்:**
i. பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும்.
ii. பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.
iii. பொருள் முக்கிய இடம் பெறுகிறது.
**2. விலை:**
i. பிலிப் கோட்லர் அவர்களின் கூற்றுப்படி, "விலை என்பது பண்டங்கள் மற்றும் பணிகள் மாற்று மதிப்பு ஆக பெறப்படும் ஒன்றாகும்".
ii. நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ள தக்க ஒன்றுதான் விலை.
**3. இடம்:**
i. உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம் வரை பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்லவில்லை எனில் அனைத்தும் பயனற்றதாகும்.
ii. சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.
**4. விற்பனை மேம்பாடு:**
i. சந்தையில் ஒரு பொருள் என்னதான் தரமுடையதாக இருந்தாலும், மேலும் விலையில் சாதக நிலை இருந்தாலும் நுகர்வோர் மத்தியில் பொருளின் சிறப்பியல்புகள் மற்றும் பயன்பாடு குறித்து தெரியப்படுத்தாத நிலையில் அப்பொருள் நிர்ணயித்த வெற்றியை ஒருபோதும் அடைய இயலாது.
ii. எனவே மேம்பாடு நடவடிக்கைகள் மிகவும் அவசியமான ஒன்று.
iii. மேம்பாடு நடவடிக்கையில் விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது.

45) a)

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

| வ.எண் | சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை (பங்குச்சந்தை) | பண்டமாற்று பரிவர்த்தனை (பொருட்கள் பரிமாற்றகம்) |
|---|---|---|---|
| 1 | பொருள் | பங்குச்சந்தை என்பது தொழில் துறை மற்றும் நிதிப் பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை | ஒரு பண்டமாற்ற பரிமாற்றகம் என்பது பண்டமாற்ற சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் இடத்தில பொருட்களை பரிமாற்றம் செய்வதாகும். |
| 2 | பணிகள் | சந்தைப்படுத்துதலை எளிதாக்குகிறது. | பத்திரங்களுக்கு தேவை ஏற்படுத்துதல் அல்லது பத்திரங்களுக்கு விலைக் காப்பீடு சேவைகள் மற்றும் நீர்மைத் தன்மையை ஏற்படுத்துகிறது. |
| 3 | நோக்கம் | பொருள் மூலதன உருவாக்கம் மற்றும் மூலதன ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்குகிறது. | ஆபத்து குறைப்பு மூலம் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க உதவுகிறது. |
| 4 | பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள் நிறுவனங்களின் வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள் |
| 5 | ஒப்பந்தங்களின் காலம் | ரொக்கம், உடனடி வழங்கல் மற்றும் பதினைந்து நாட்களுக்கான ஒப்பந்த கணக்கு | எதிர்கால சந்தை ஒப்பந்தங்களுக்கான 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மற்றும் உடனடி பண ஒப்பந்தங்கள். |
| 6 | ஆவண வர்த்தகம் | இங்கு பங்குகள், பத்திரங்கள், தொழில்துறை பத்திரங்கள் சந்தைப்படுத்தப்படுகிறது. | இதில் அதிகளவு வர்த்தகம், விலை நிச்சயமற்ற மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. |
| 7 | ஊக வணிகம் | ஒரு பரந்த, தயாராக நீர்மை மற்றும் தொடர்ச்சியான பத்திரங்கள் விற்பனையை உறுதிப்படுத்துகின்றன. | விலை இடர்பாட்டின் ஈர்ப்பு உத்தேசத்தை உறுதி செய்கிறது. |
| 8 | முன் ஒப்பந்தம் | பத்திரங்கள் முழுமையாக தரநிலையாக்கப்படுவதால், இவை எளிமையாக்கப்படுகின்றன. | எதிர்கால ஒப்பந்தத்தை எளிதாக்குவதற்கு தரநிலை வகுப்புகளுக்கு நியமங்கள் இருக்க வேண்டும். |
| 9 | ஒருமுனைப் படுத்துதல் | விற்பனையாளர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பத்திரங்களை வழங்குவதற்கு ஒருமுனைப் படுத்துதல் எளிமையான ஒன்றாகும். | விற்பனையாளர் தரமான அல்லது பிறர் வழங்கக்கூடிய பொருட்கள் வழங்குவதில் ஒருமுனைப்படுத்துதல் கடினமான ஒன்றாகும். |
| 10 | விலை மேற்கோள் | முன்னோக்கிய ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை ஒருமுனை மேற்கோள் மட்டுமே சாத்தியமாகும். | எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பலமுனை மேற்கோள் சாத்தியமாகும். |

**(OR)**

b)

| வ.எண். | மின் சந்தைப்படுத்துதல் | பாரம்பரிய சந்தைப்படுத்துதல் |
|---|---|---|
| 1. | பொருள்கள் / சேவைகளை மிக விரைவாக குறைந்த செலவில் மேம்படுத்த முடியும். | இம்முறையில் மிக தாமதமாகவும், அதிக செலவிலும் மட்டும் பொருள், சேவையை மேம்படுத்த முடியும். |
| 2. | உலக அளவில் மிக விரைவில் மிக எளிதாக பொருள்களை மேம்படுத்தி சந்தையிட முடியும். | இம்முறையில் அவ்வளவு எளிதாக உலகளவில் பொருட்களை மேம்படுத்த முடியாது. காலமும், செலவும் அதிகமாகும். |
| 3. | வணிக நிறுவனங்கள் மிகக் குறைந்த அளவு மனித வளத்துடன் தொழிலை விரிவுபடுத்தலாம். | இதில் தொழிலை விரிவுபடுத்த அதிக மனித வளம் தேவைப்படுகிறது. |
| 4. | இம்முறையில் ஆண்டு முழுவதும் வாரம் 7 நாட்கள் 24 மணி நேரமும் குறைந்த மனித சக்தியுடன் சந்தையிட முடியும். | இம்முறையில் ஆண்டு முழுவதும் வாரம் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் சந்தையிடுவது இயலாத காரியம். |

46) a)

1. போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கிறது.
2. பங்கு சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதலை செய்கிறது.
3. பங்கு பரிவர்த்தனை விசாரணைகள், இடைத்தரகர்கள் மற்றும் தன்னியக்க ஒழுங்குபடுத்தும் அமைப்புகளை ஆய்வு செய்கிறது.
4. பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.
5. பங்கு சந்தைகளில் செயல்படும் நிதி இடைத்தரகர்களால் மேற்கொள்ளப்படும் மோசடி மற்றும் நியாயமற்ற முறைகளை தடை செய்கிறது.
6. பத்திர சந்தையுடன் தொடர்புப்படுத்தக்கூடிய பல்வேறு இடைத்தரகர்கள் ஆகியோரின் பதிவு மற்றும் செயல்பாடுகளை கட்டுப்படுத்துகிறது.
7. மூலதன வெளியீட்டில் ஈடுபட்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகளை வெளியிடுகிறது.
8. சிறிய முதலீட்டாளர்களை பாதிக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் பொருத்தமான வழிமுறைகளை வெளியிட்டுள்ளது.
9. பரஸ்பர நிதியகங்கள் போன்ற கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பணிகளை மேற்கொள்கிறது.
10. இடைத்தரகர்களின் சுய கட்டுப்பாடு ஒழுங்குமுறை அமைப்பை ஊக்குவிக்கிறது.

**(OR)**

b)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


அதிக விலை :
(i) பல்வேறு கட்டாயத்தின் மூலம் விற்பனையாளர்கள் பொருட்களின் நியாயமான விலையைக் காட்டிலும் அதிகமான விலைக்கு பொருட்களை விற்கின்றனர்.
(ii) பொருட்களை பதுக்கி வைப்பதன் மூலம் செயற்கையான பற்றாக்குறையை ஏற்படுத்தி கொள்ளை இலாபம் ஈட்டும் நோக்கில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்கின்றனர்.
(iii) இதன்மூலம் நுகர்வோர்கள் அதிக விலை கொடுத்து கள்ளசந்தையில் பொருட்களை வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறாரகள்.
2. கலப்படம்
(i) உணவுப்பொருட்களில் அதே மாதிரியான பதிலீட்டு பொருளை சேர்ப்பது கலப்படம் ஆகும். (உதாரணம்) மிளகாய் வத்தல் பொடியில் செங்கல் தூளை சேர்ப்பது.
(ii) கொள்ளை இலாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கில் வணிகர் கலப்படமான பொருளை விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்டுகிறார்.
(iii) இவ்வாறு கலப்பட பொருட்களை வாங்கி நகரும் நுகர்வோர்கள் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிப்படைகிறார்கள்.
3. போலியான பொருட்கள்
(i) மக்கள் மத்தியில் பிரபலமடைந்த வணிகக்குறிகள் கொண்ட போலியான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. (எ.கா) வானொலி, வாகன உதிரிபாகம், ஆடைகள் மற்றும் பேனாக்கள்.
(ii) எனவே தரம் குறைந்த பொருளை கூட அசல் பொருளுக்கான விலையை கொடுத்து நுகர்வோர்கள் வாங்கி ஏமாறுகிறார்கள்.
4. செயற்கையான பற்றாக்குறை
(i) ஒரு சில சூழலில் வணிகர்கள் தங்களிடம் அதிகளவு இருப்பு இருப்பினும் இல்லை எனக் கூறி செயற்கை தேவையை உருவாக்குகிறார்கள்.
(ii) நுகர்வோர்கள் தங்களின் தவிர்க்க இயலாத தேவையின் காரணமாக அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.
(iii) இதன் மூலம் நுகர்வோர்கள் சுரண்டப்பட்டு வணிகர்கள் கொள்ளை இலாபம் ஈட்டுகிறார்கள்.
5. தரக்குறைவு :
(i) ஒரு சில பொருட்கள் கட்டுமம் செய்யப்பட்டு முத்திரையிடப்பட்டினும் அதனுள் குறைவான எடை தரம் மற்றும் கெட்டுபோன பொருட்களே உள்ளன.
(ii) அந்த பொருளை மாற்ற முற்படும் பொழுது நுகர்வோரின் கவனக்குறைவாலே ஏற்பட்டுள்ளது என்று வணிகர்கள் நுகர்வோர் மீது குற்றம் சாட்டுகின்றனர்.
(iii) மேலும் ஒரு சில வணிகர்கள் நுகர்வோருக்கு இரசீது தராமலும், இரசீதில் விற்ற பொருட்கள் திரும்ப பெறப்படாது என்று அச்சிட்டு நுகர்வோர்களை சட்டப்படியே ஏமாற்றுகிறார்கள்.
6. இடர்பாடு கொண்ட பொருட்கள் :
(i) தயாரிப்பாளர்கள் தங்களின் பொருட்களை பயன்படுத்தும் விதம் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி நுகர்வோருக்கு நடவடிக்கை பற்றி நுகர்வோருக்கு மாதிரி விளக்கம் அளிக்க வேண்டும்.
(ii) அவ்வாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லாமல் பொருட்களை கையாளும் பொழுது நுகர்வோர்கள் பாதிப்படைகிறார்கள்.
7. உத்திரவாதம் மற்றும் சேவைகள் :
(i) ஒரு சில குறிப்பிட்ட ஆடம்பர பொருளுக்கு உத்திரவாதம் அளித்து குறிப்பிட்ட காலம் வரை இலவச சேவை வழங்குவதாக விற்பனையாளர் உறுதியளிக்கிறார்.
(எ.கா:தொலைக்காட்சி)
(ii) மேலும் அந்த உத்திரவாதமானது எளிதில் உடையாது என கருதும் உதிரிபாகங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு மற்ற உதிரிபாகங்களுக்கு வழங்கப்படுவதில்லை.
(iii) உத்திரவாதம் அளித்த உதிரிபாகங்களுக்கு கூட நுகர்வோரின் கவனக்குறைவால் பழுது ஏற்பட்டது. எனக் கூறி இலவச சேவையை அளிக்க மறுக்கின்றனர்.
8. தகுதியற்ற பொருட்கள் :
(i) மனித நுகர்வோருக்கு தகுதியற்ற பொருட்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.
(ii) உடையாது என்று சான்றளிக்கப்பட்ட பொருட்கள் உபயோகப் படுத்தும்போது உடைந்து விடுகின்றது.
(iii) இது போன்ற காரணங்களால் நுகர்வோர் பாதிப்படைகிறார்கள்.
9. பொய் விளம்பரங்கள் :
(i) விளம்பரங்களில் பொருள் குறித்த தகவல்கள் மிகச்சிறிய அளவிலே வெளிப்படுத்தப்படுகின்றது.
(ii) விளம்பரங்கள் பொருளின் தரம், விலை, உள்ளடக்கம், பயன்பாடு, உத்திரவாதம், செயல்திறன் குறித்த தவறான கருத்துக்களை பரப்புகின்றன.
(iii) இவ்வகையான பொய் விளம்பரங்களை நம்பி பொருட்களை வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

47) a)

திரட்டுதல்:
வேலை பகுப்பாய்வு, மனித வள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தேர்வு, வேலை வாய்ப்பு, பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றின் மூலம் மனித வளத்தை ஈர்க்கும் செயலை குறிக்கிறது.
வளர்ச்சி :
செயல்திறன் மதிப்பிடுதல், பயிற்சி செயலதிகாரி வளர்ச்சி, தொழில் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி, நிறுவன வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது அபிவிருத்தியாகும்.
ஊதியம் :
இது வேலை மதிப்பீடு, ஊதியம் மற்றும் சம்பள நிர்வாகம், ஊக்கத்தொகை, மேலூதியம், விளிம்பு நலன்கள் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளுதல் :"
சுகாதார மற்றும் பாதுகாப்பு நலன், சமூக பாதுகாப்பு, வேலை திருப்தி மற்றும் வேலையினால் ஏற்படும் வாழ்க்கைத் தரத்தின் மூலம் இது சத்தியமாமாகிறது.
ஒருங்கிணைத்தல் :
தனிப்பட்ட விருப்பிற்கும், நிறுவன விருப்பிற்கும், இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உள்ள செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறது.
பராமரிப்பு :
பணியாளர் வேலையை விட்டு செல்வதைக் குறைத்தல்,மனித வளத்தை கணக்கில் கொள்ளல், தணிக்கை மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்வதன் மூலம் பணியாளர்களை பராமரிப்பதை இச்சொல் குறிக்கிறது.

**(OR)**

b)

1. பொருளுக்கான விலையை அளித்தல்.
2. பொருளை தனது இருப்பிடத்திற்கு வந்து அளிக்குமாறு விற்பனையாளரிடம் கோருதல்.
3. குறித்த நேரத்தில் பொருட்களை பெறாமலிருந்தால், நட்டத்திற்கு பொறுப்பேற்றல்.
4. பெற்ற பொருளுக்கு தாமதமாக பணம் செலுத்துதல் மற்றும் சேதம் ஏற்படுத்துதல் போன்றவைக்கான நடத்தை ஏற்றல்.
5. பொருட்களை பயன்படுத்தும்போது விதிமுறைகளின்படி, முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.
6. நுகர்வு பொருட்கள் மீதான தனது தேவை மற்றும் எதிர்பார்ப்பை தெளிவாக விற்பனையாரிடம் வெளிப்படுத்துதல்.
7. பொருட்களை வாங்குமுன் கட்டாயம் பொருளின் விலை, தரம் மற்றும் அளவு ஆகியவற்றை பார்க்க வேண்டும்.
8. பொருட்களை வாங்கும்போது ரொக்க இரசீது மற்றும் உத்திரவாத அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும்.
9. பொருட்களில் குறைவு மற்றும் சேவை குறைவு ஏற்பட்டாலோ நுகர்வோர் குறை தீர்வகத்தில் புகார் சமர்ப்பிக்க வேண்டும்.
10. ISI,அக்மார்க்,FPO போன்ற தரக்குறியீடு சான்று மற்றும் அடையாளக் குறியீடுகள் உள்ளதா என சரிபார்க்க வேண்டும்.
11. விளம்பரங்கள் மூலம் தரப்படும் தகவல்கள் பொய்யாக இருப்பின் அதுபற்றி விற்பனையாளர் அலல்து விளம்பரதாரரிடம் தெரிவிக்க வேண்டும்.
12. பாதுகாப்பு உரிமை, பொருட்களைப் பற்றிய தகவல் அறியும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, குறை தீர்வகத்தில் தெரியப்படுத்துதல் போன்ற உரிமைகள் உள்ளது என்பதைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593